


**26.12. 2024**

தலைப்புச் செய்திகள்

1. தேசிய பால புரஸ்கார் விருதுகளை 17 குழந்தைகளுக்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கி கவுரவித்தார்.

2. வீர சிறார் தினம் தேசத்தில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

3. சுனாமி ஆழிபேரலையின் 20-வது ஆண்டு நினைவுதினத்தை ஒட்டி கடலோர மாவட்டங்களில் ஏராளமான மக்கள் இன்று மலரஞ்சலி செலுத்தினர்.

4. தமிழக கல்லூரிகளில் மாணவிகளின் பாதுகாப்பிற்கான குழுக்கள் செயல்பாட்டில் உள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

5. தமிழ்நாட்டில் நடப்பாண்டு 2 லட்சம் டன் கரும்பு அரவைக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் கூறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

**********

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தேசிய பால் புரஸ்கார் விருதுகளை இன்று 17 குழந்தைகளுக்கு இன்று புதுதில்லியில் வழங்கினார்.

கலை, கலாச்சாரம், துணிச்சல், புத்தாக்கம் அறிவியல் தொழில்நுட்பம் சமூக சேவை விளையாட்டு சுற்றுச்சூழல் ஆகிய 7 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டமைக்காக இவ்விருதுகளை குடியரசு தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர் குழந்தைகளின் திறன்களை ஊக்குவிப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுவது நம் கலாச்சாரத்தின் முக்கிய அம்சமாக திகழ்வதாக எடுத்துரைத்தார்.

இக்கலாச்சாரம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

**********

பிரதமர்

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்ற வீர சிறார் தின நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய பிரதமர் திரு.நரேந்திரமோடி மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட வீர சிறார் தினம் தற்போது தேசிய அளவில் பெரும் உத்வேகமாக திகழ்கிறது என்று கூறியுள்ளார்.

எவ்வித சூழலிலும் எத்தனை இடர்பாடுகள் நேரிட்டாலும் தேச நலனிற்கு முன்னுரிமை அளிப்பதை இத்தினம் வலியுறுத்துவதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

நாட்டு நலனிற்கான எந்த செயலும் துணிச்ச்ல் மிகு செயலாக கருதப்படும் என்று கூறிய பிரதமர் இளையோரின் தேச அர்ப்பணிப்பு போற்றுதலுக்குரியது என்று குறிப்பிட்டார்.

பிரதமரின் ராஷ்ட்ரிய பால புரஸ்கார் விருதுகளை வென்ற குழந்தைகளுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

**********

சுனாமி

சுனாமி ஆழிபேரலையின் 20-வது ஆண்டு நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

2004-ம் ஆண்டு, இதேநாளில், நேரிட்ட சுனாமி ஆழிப்பேரலையால் நாகை, கன்னியாகுமரி, கடலூர் உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் ஏராளமானோர் உயிரிழந்தனர்.

சுனாமியால் உயிரிழந்தவர்களின் நினைவாக தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி சென்னையில் மெழுகுவர்த்தி ஏற்றி இன்று காலை அஞ்சலி செலுத்தினார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமியால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அமைதி பேரணி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

கடலூர் மாவட்டம் தேவனாம்பட்டு கடற்கரையில் சுனாமியில் உயிரிழந்தோருக்காக அமைக்கப்பட்ட நினைவு தூணில் ஏராளமான மீனவ குடும்பங்கள் அஞ்சலி செலுத்தினர்.

நாகை மாவட்டத்தில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள நினைவு ஸ்தூபியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி, பூம்புகார், திருமுல்லைவாசல், பழையாறு, வாணகிரி உள்ளிட்ட பகுதிகளில் சுனாமியில் உயிர்நீத்த 319 பேரின் நினைவிடத்தில் பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

20 ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் நேரிட்ட சுனாமி ஆழிப்பேரலையில் தமிழ்நாட்டின் 8 ஆயிரம் பேர் உயிரிழந்ததோடு ஒரு லட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

*********

முதலமைச்சர்

மதுரை கள்ளழகர், மருதமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்களில் முழுமையான அன்னதான திட்ட விரிவாக்கத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொலி வாயிலாக இன்று தொடங்கிவைத்தார்.

பழனி அருள்மிகு தண்டாயதபாணி சுவாமி திருக்கோவில் சார்பிலான பள்ளி கல்லூரி மாணாக்கருக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தையும் முதலமைச்சர் துவக்கிவைத்தார்.

*********

நல்லகண்ணு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு. ஆர். நல்லகண்ணுவின் 100ஆவது பிறந்த நாளை ஒட்டி ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு திரு.நல்லக்கண்ணுவின் பெயர் சூட்டப்படும் என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

**********

செயலர்கள் நியமனம்

மத்திய அரசின் வருவாய் துறை செயலாளராக மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரி அருணிஷ் சாவ்லா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மருந்தியல் துறை செயலாளராக அமித் அகர்வால்

உயர்கல்வி துறை செயலாளராக வினித் ஜோஷி

தேசிய உற்பத்தி குழு தலைமை இயக்குனராக நீரஜா சேகர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஜவுளி, ஊழியர் பயிற்சிதுறை, தேசிய சிறுபான்மையினர் ஆணையப் பிரிவுகளுக்கும் புதிய செயலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**********

கோவிசெழியன்

தமிழ்நாட்டின் அனைத்து கல்லூரிகளிலும் மாணவிகளின் பாதுகாப்பிற்காக குழுக்கள் செயல்பாட்டில் உள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

தங்சாவூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் சென்னை அண்ணா பல்கலைகழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் விரைந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிக்கு சட்டப்பூர்வ தண்டனை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்த விவகாரத்தில் சில மணி நேரங்களிலேயே சம்மந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதனிடையே அண்ணா பல்கலைகழக சம்பவத்தை கண்டித்து பிஜேபி, அஇஅதிமுக உள்ளிட்ட கட்சிகள் பல்கலைகழக வளாகத்தை முற்றுகையிட்டு கண்டன ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**********

ரகுபதி

தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ். ரகுபதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக தமிழகம் திகழ்வதாக குறிப்பிட்டார்.

வாய்ஸ்

**********

சிவசங்கர்

தமிழ்நாட்டில் நடப்பாண்டு கரும்பு அரவை பருவத்தில் தினசரி 2 ஆயிரத்து 800 டன் கரும்புகள் அரவைக்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் நடப்பாண்டிற்கான அரவை பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், 2 லட்சம் டன் கரும்புகள் அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**********

துரைமுருகன்

தமிழ்நாட்டில் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப்பெறாதவர்களுக்கு விரைவில் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூரில் 9 லட்ச ரூபாய் மதிப்பில் புதிய நியாயவிலைக்கடையை இன்று திறந்துவைத்து பேசிய அவர் அண்மை மழையால் சேதமடைந்த நீர்நிலைகளை சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

டங்ஸ்டன் சுரங்க பணிகளை மத்திய அரசு தற்போது நிறுத்திவைத்துள்ளதாக கேள்வி ஒன்றிற்கு அமைச்சர் பதில் அளித்தார்.

**********

பெரியகருப்பன்

தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் கல்லல் ஊராட்சியில் 39 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழு கட்டிடத்தை இன்று திறந்துவைத்து பேசிய அவர் மகளிர் வாழ்வாதாரம் உயர்ந்தால் கிராமங்களின் வளர்ச்சி உயரும் என்ற அடிப்படையில் கிராம பகுதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

மாநிலத்தில் மக்களின் தேவைக்கேற்ப திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

**********

டைடல் பூங்கா

திருச்சியிலும், மதுரையிலும் தொழில்நுட்ப பூங்கா கட்டுமான பணிகளை மேற்கொள்ள சுற்றுச்சூழல் அனுமதி கோரி தமிழக அரசு விண்ணப்பித்துள்ளது.

திருச்சியில் 415 கோடி ரூபாய் மதிப்பில் 57 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 6 தளங்களுடன் இப்பூங்கா அமைக்கப்பட உள்ளது.

**********

வாசுதேவன்

மறைந்த பிரபல மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் நாயர் மறைவிற்கு குடியரசுத்தலைவர் பிரதமர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ஊரக இந்தியாவிற்கு தமது எழுத்து மூலம் எழுச்சியூட்டிய வாசுதேவனின் மறைவு இலக்கிய உலகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

மலையாள திரை உலகிலும், இலக்கிய துறையிலும் மிகவும் மரியாதைக்குரியவராக திகழ்ந்த வாசுதேவன் விளிம்பு நிலை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தவர் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது சமூகவலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

அன்னாரது குடும்பத்தினருக்கு தங்களது ஆழ்ந்த இரங்கலை இரு தலைவர்களும் தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

அன்னாரது மறைவை ஒட்டி கேரள மாநிலத்தில் இன்றும் நாளையும் இரண்டு நாள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

**********

இருவரி

திருப்பூர் மாவட்டத்தில் இயற்கை பூச்சிவிரட்டிகளான ஆடாதோடா, நொச்சி நாற்றுகள் வழங்கப்பட உள்ளதால் விவசாயிகள் இதனை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் ஏராளமான வெளிநாட்டு பறவைகளின் வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் அங்கு குழுமியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஈரோடு மாவட்டம் மொடச்சூர் அருள்மிகு தான்தோன்றியம்மன் திருக்கோவிலில் இன்று நடைபெற்ற குண்டம் இறங்கும் நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்று நேர்த்திகடன் செலுத்தினர்.

**********

மேட்டூர்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 2 ஆயிரத்து 331 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து 800 கன அடி தண்ணீர் திறகப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 119.53 அடியாகும்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு மூவாயிரத்து 500 கன அடியாக உள்ளது.

**********

வானிலை

தென்மேற்கு வங்ககடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்றுகாலை அதேபகுதியில் வலுவிழந்துள்ளது.

இதன்காரணமாக தமிழ்நாட்டில் பரவலாக இன்றும் நாளையும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட தமிழக கடலோர பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*********

கிரிக்கெட்

மெல்பர்னில் இந்தியாவிற்கு எதிரான பார்டர் கவாஸ்கர் கோப்பை, 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்சில் ஆட்ட நேர இறுதியில் 6 விக்கெட் இழப்பிற்கு 311 ரன் எடுத்திருந்தது.

பும்ரா 3 விக்கெட்டையும்,

ஜடேஜா, **Akash Deep,** வாஷிங்டன் சுந்தர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

*********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

*********